பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் அறிக்கை

# பல்கலைக்கழக அனுமதி – கல்வியாண்டு 2013/2014

## (2013 ஆம் ஆண்டின் க.பொ.த (உ/த) பரீட்சையின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டது)

2013ஆம் ஆண்டில் நடைபெற்ற க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு 2013/2014ஆம் கல்வியாண்டிற்காக பல்கலைககழக அனுமதிக்கு அபேட்சகர்களைத் தெரிவு செய்வதற்கு பொருத்தமான தேர்வு விதி ஒன்றை முடிவுசெய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினரின் பரிந்துரைகளுக்கமைய மற்றும் 1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க திருத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 15(VII) ஆம் பிரிவிற்கு இணங்க அனுமதிகள் குழுவின் ஆலோசனைகளுடன் 2013/2014ஆம் கல்வியாண்டிற்காக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பின்வரும் முறை பயன்படுத்தப்படும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. 2013 இல் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு 4ஆவது தடவையாக தோற்றிய மாணவர்களில் உச்ச நீதிமன்ற தீர்ப்பு SC.FR. No 418/2012 இல் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளுக்கு இணங்க அமைச்சரவை அமைச்சர்களினால் 01.03.2013 ஆம் திகதியிடப்பட்ட 13/0205/521/008 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தில் விளக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்குள் வருகின்ற மாணவர்கள் மட்டும் கல்வியாண்டு 2013/2014 க்கான பல்கலைக்கழக அனுமதிக்காக கருத்திலெடுக்கப்படுவர்.

2. பல்கலைக்கழக அனுமதி நோக்கத்திற்காக 2013 ஆம் ஆண்டு புதிய பாடத்திட்டத்தின் கீழும், பழைய பாடத்திட்டத்தின் கீழும் க.பொ.த (உ/த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் இரு வேறுபட்ட பிரிவினராக கருதப்படுவர்.

3. 2013/2014 கல்வியாண்டுக்காக பிரசுரிக்கப்படவுள்ள பல்கலைக்கழக அனுமதிக்கான கைநூலில் கொடுக்கப்பட்டுள்ளவாறு 2013 ஆம் ஆண்டு க.பொ.த (உ/த) பரீட்சையின் ஒவ்வொரு கற்கைநெறிக்குமான முன் நிபந்தனைக்குரிய பாடங்களைத் திருப்திப்படுத்தி ஒவ்வொரு கற்கைநெறிக்கும் தகுதிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை விகிதாசாரத்தின் அடிப்படையில் பல்கலைக்கழகங்கள் முன்மொழிந்த கற்கைநெறிகளுக்குமான இடங்களின் எண்ணிக்கை புதிய பாடத்திட்ட, பழைய பாடத்திட்ட மாணவர்களுக்கிடையில் வேறாக ஒதுக்கப்படும்.

4. மேலே 3ஆவது பந்திக்கு அமைவாக, மேலே 1ஆவது பந்தியில் குறிப்பிட்டதற்கிணங்க 4வது தடவையாக பரீட்சைக்குத் தோற்றிய எவரேனும் தெரிவு செய்யப்பட்டிருப்பின், முதல் மூன்று தடவைகளில் தோற்றிய மாணவர்களது உரிமைகளை பாதுகாக்கும் வகையில் முன்மொழியப்பட்ட உள்வாங்கும் மாணவர்களுக்கு மேலதிகமாக இவர்கள் வரிசை ஒழுங்கில் அடுத்து உள்ளவர்களால் பிரதியீடு செய்யப்பட்டு அனுமதிக்கப்படுவார்கள்.

செயலாளர்
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20, வாட் பிரதேசம்,
கொழும்பு – 07
17.12.2013